1979 மார்ச் 14]

வேலூர் சி. எம். சி. மருத்துவ மனைக்கு அரசு மானியம்

*வினா எண். 395 திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேலூரிலுள்ள சி. எம். சி. மருத்துவ மனைக்கு அரசு மானியத் தொகை வழங்கப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், ஆண்டுக்கு எவ்வளவு?

(இ) எத்தனை ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது?

மாண்புமிகு திரு திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) & (இ) : வேலூரிலுள்ள கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அன்றாடம் இலவசமாக சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு 50 பைசா வீதம் ஒரு வருடத்திற்கு உயர்ந்த அளவு ரூ. 10,000 மானியத் தொகையாக அரசு நிர்ணயித்தது. 1951-ஆம் ஆண்டு முதல் 1953-ஆம் ஆண்டு வரை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10,000 இவ்வரசு அளித்துள்ளது. இம்மானிய உதவி போதுமானதாக இல்லை என்பதால், 1954-ஆம் ஆண்டு முதல் இம்மானியத் தொகையின் உயர்ந்த அளவை ரூ. 10.000த்திலிருந்து ரூ. 20,000ஆக இவ்வரசு உயர்த்தியுள்ளது. அதன்படி, 1954-ஆம் ஆண்டு முதல் 1971-ஆம் ஆண்டுவரை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20,000/- தொடர்ந்து வழங்கப்பட்டது.

மதுரையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு

*வினா எண் 396. திரு மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு திருச்சி ஆர். சௌந்திரராஜன் :—

(அ) (ஆ) : மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் ஏற்கெனவே புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

மலேரியா தடுப்பு நடவடிக்கை

* வினா எண். 397 திரு என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :